87—

பறவைகள் சரணாலயம்

*__34399—திருமதி எஸ். விஜயதரணி:__

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தேரூர் குளம், தத்தையார் குளம், சுசீந்தை குளம் ஆகிய பகுதிகளில் பறவைகள் சரணாலயம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திசை நோக்கி வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேரூர் குளம், தத்தையார் குளம் மற்றும் சுசீந்தை குளம் ஆகிய இடங்களில் குளங்களை உள்ளடக்கிய 484.77 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.1.61 கோடி செலவிலே வன உயிரின பாதுகாப்புச் சட்டம், 1972-ன்கீழ் சுசீந்திரம், தேரூர் மற்றும் மணக்குடி பாதுகாப்பு ஒதுக்கீடு பகுதி என அறிவிக்கை செய்யப்பட்டு, அரசு ஆணை எண் 41 சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 19–3–2015–ல் மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி செயல்படும் இவ்வரசால் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

முற்பகல் 11–20

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 2011 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகிய உடனேயே இந்தக் கேள்வியை எழுப்பியிருந்தேன். அப்போது*

2015 மார்ச் 30]

ஆரம்ப கட்டப் பணிகள் தொடங்கி இருந்தன. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கக்கனேரி குளம், புத்தேரி மாணிக்கவேல் குளம், இறச்ச குளம், பறக்கை குளம், தேரூர் குளம், சுசீந்தை குளம், தத்தையார் குளம் உட்பட 9 குளங்களில் தற்போது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் பேசும்போது, இந்தக் கேள்வியை சட்டமன்ற உறுப்பினர் ஆனவுடன் கேட்டேன் என்று சொன்னீர்கள். 4-4-2013-ல்தான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள். அப்போதுதான் நீங்கள் சட்டமன்ற உறுப்பினரானீர்களா?

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-லேயே ஒரு முறை கொடுத்த கேள்வி, இரண்டாவது முறையாக 2013-ல் கொடுத்திருந்தேன். ஏனென்றால் அது list ஆகவில்லை என்பதால் மீண்டும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இந்தக் கேள்வியைத்தான் எடுத்திருக்கிறோம், அதைச் சொல்லுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-ல் கேட்ட கேள்வி list ஆகவில்லை. 2013-ல் மீண்டும் இந்தக் கேள்வியை நான் கேட்டிருந்தேன். அதை நீங்கள் இப்போது list செய்திருக்கிறீர்கள். அதற்காக உங்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். Late ஆனாலும், latest ஆக வாய்ப்புத் தந்திருக்கிறீர்கள். அந்த அளவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 9 குளங்களில் தற்போது வனத் துறை சார்பில் பறவைகள் சரணாலயம் அமைக்க ஆயத்தப் பணிகள் நடைபெற்றன.

கன்னியாகுமரி மாவட்டம் இயற்கை எழிலும், நீர் வளமும், நில வளமும் கொண்ட மாவட்டம். ரஷ்யா, சைபீரியா, சீனா, நியூசிலாந்து போன்ற நாடுகளிலிருந்து ஊசிவால் வாத்து, மூக்கறை நாரா, சாதா வாத்து, விஜியன், மலாடு, நீலச் சிறகு வாத்து, சாதா போச்சாடு, கொண்டைப் போச்சாடு, வெண்கண் போச்சாடு, மணல் உள்ளான், கொசு உள்ளான் போன்ற பறவைகள் 5,000 முதல் 8,000 கிலோ மீட்டர் தூரம் பறந்து குமரிக்கு வருகின்றன. Variwal godwit பறவை 8 நாட்கள் தொடர்ந்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, உங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறது. கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். நேரம் இல்லை, கேள்வியைச் சுருக்கமாகக் கேட்டு, சீக்கிரம் முடியுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பறவைகள் சம்பந்தமானது, அதற்காக முக்கியத்துவம் தருவோம். 8 நாட்கள் தொடர்ந்து* non-stop *ஆகப் பறந்து 16 ஆயிரம் கிலோ மீட்டர் சைபீரியா, அலாஸ்கா போன்ற நாடுகளுக்கெல்லாம் செல்லும் இந்தப் பறவைகள் குறித்த ஆராய்ச்சி சுற்றுலாப் பயணிகள் மூலமாக நடக்கிறது. அயல் நாட்டு சுற்றுலாப் பயணிகள் பல்வேறு ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தச் சுற்றுலாப் பயணிகளால் வருமானம் பெருகுகிறது. தற்போது காட்சிக் கோபுரம், குளத்தைச் சுற்றி வேலி மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது சுற்றி வரும் சாலை, வாகன நிறுத்தம், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி போன்றவற்றை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுசீந்திரம், தேரூர் மற்றும் மணக்குடி போன்ற பகுதிகள் பல்லுயிர் பறவைகள் கொண்ட சூழல் அமைந்த நன்னீர் பகுதிகளாகும். இது பல்வேறு வகையான வெப்ப மண்டல தாவர மற்றும் விலங்கினங்களுக்குப் புகலிடமாக உள்ளது. இங்கே 110 வகையான நீர்த் தாவரங்கள், 44 வகையான மீன்கள் மற்றும் 90 வகையான பறவைகள் காணப்படுகின்றன. 90 வகை பறவை இனங்களில் கிட்டத்தட்ட 50 வகையானவை வலசை வரும் பறவைகளாகும். பருவத்தின் உச்சத்தில் 25,000 வலசை வரும் பறவைகள் கணக்கெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் கொக்கு வகைகள்,* ibises *நாரை இனங்கள், உள்ளான் மற்றும்* Plover *போன்ற பறவைகள் முக்கியமானவை. ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களால் இந்தப் பகுதியை ஒதுக்கீடு பகுதியாக அறிவிக்கை செய்யப்பட்டு, இந்த நிலையில் அங்கே பறவை இனங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கை தொடர்பாக, மேலாண்மைக் குழு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்ட*

2015 மார்ச் 30]

ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், கன்னியாகுமரி மாவட்ட வன அலுவலரை உறுப்பினர்–செயலராகவும், பொதுப் பணித் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண்மைத் துறை, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு குழு அமைக்க உரிய நடவடிக்கைகள் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டுப் பறவைகள் இங்கே வருவதால் குளத்தைச் சுற்றியுள்ள சுமார் 3 கிலோ மீட்டர் தூர நெல் வயல்களில் உள்ள நாற்று, நெல் மணிகளைப் பறவைகள் உணவாக உண்டு விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துகின்றன. வேளாண் விளைபொருட்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட சுற்றுலாமூலம் கிடைக்கும் வருமானத்தில் 30 சதவீதத்தை இழப்பீடாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பறவைகளை வயல்வெளிகளில் வரவிடாமல் தடைசெய்ய பரண் அமைத்தல், மின்சாரம்மூலம் ஒலி எழுப்புதல் போன்ற உபகரணங்களை வாங்க விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–25

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய மேற்படி கோரிக்கைகளை ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*